## கேள்வி:
## "எல்லா சபைகளிலும் கிறிஸ்தவர்கள் உள்ளனரா?"

## பதில்:

*"எல்லா சபைகளிலும் கிறிஸ்தவர்கள் உள்ளனர்" என்பது ஒரு புகழ்மிக்க கூற்றாயிருக்கிறது. இது வேதாகமத்தில் கூறப்பட்டிருந்தால், எல்லா முரண்பாடுகளுக்கும் ஒரு முடிவாகிவிடும். ஆனால், தேவனுடைய தவறாத வார்த்தைகளில் இவ்விதமாய்க் கூறப்படாததால், மனிதனுடைய, தவறக்கூடிய வார்த்தைகளைச் சோதித்துப் பார்க்க வேண்டும் (1 தெச. 5:21).*

*எல்லா சபைகளிலும் கிறிஸ்தவர்கள் இருக்கின்றார்களா என்று சோதித்துப் பார்க்க நீங்கள் உங்கள் மனதைத் தயார்ப்படுத்தவோ அல்லது விரும்பவோ இல்லையென்றால், உங்கள் இருதயம் சரியானதல்ல. ஏவப்பட்ட பிரசங்கியாரான ஸ்தேவான் கூறியவைகளை, கேட்டவர்களில் சிலர் விசுவாசிக்கவில்லையென்று தேவனுடைய வசனம் கூறுகின்றது. அந்தப் பிரசங்கியார் கூறியதை சோதித்தறிய மறுத்து, "அவனைப் பார்த்துப் பல்லைக் கடித்தார்கள்," பிறகு, "அவர்கள் உரத்த சத்தமாய்க் கூக்குரலிட்டு, தங்கள் காதுகளை அடைத்துக் கொண்டு, ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து, அவனை நகரத்துக்குப் புறம்பே தள்ளி, அவனைக் கல்லெறிந்தார்கள் ..." (அப். 7:54-58). அவர்களுடைய இருதயங்கள் சரியானதாய் இருக்கவில்லை, நீங்கள் தேவனுடைய வசனத்தைப் படிக்க மறுத்தால் உங்கள் இருதயமும் சரியானதல்ல.*

*ஏவப்பட்ட பிரசங்கியார் கூறியவைகளைக் கேட்ட இன்னொரு குழுவானது விசுவாசித்ததோடு, "மனோ வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததாக" (அப். 17:11) தேவன் கூறினார். அவர்களுடைய இருதயங்கள் சரியானதாய் இருந்தது.*

*"கிறிஸ்தவன்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தும்போது, நாம் என்ன பேசுகின்றோம்? "கிறிஸ்தவன் ஒரு நல்ல மனிதன்" என்று அநேக மக்கள் பதில் அளிக்கின்றனர். ஒரு நபர், "எந்த சபையிலும் உறுப்பினராக இல்லாத எனது பக்கத்து வீட்டுப் பெண்மணி, ஒரு நல்ல பெண்மணியாக இருக்கிறார். அவர் நோயுற்ற பலருக்கு உதவி செய்கிறார். நகரில் உள்ள மிகச் சிறந்த கிறிஸ்தவப் பெண்மணிகளில் ஒருவராக இருக்கிறார்" என்று கூறக்கூடும். எல்லா சபைகளிலும் கிறிஸ்தவர்கள் உள்ளனரா? "கிறிஸ்தவன்" என்றால் இரக்கமுள்ள நபர், அண்டை அயலார் மற்றும் பிறரை நினைத்துப் பார்க்கக் கூடியவர் என்றுமட்டும் கருதினால் மேற்கண்ட கேள்விக்கு நிச்சயமாக ஆம் என்ற பதிலே பொதுவாக கிடைக்கும். "கிறிஸ்தவன்" என்பதற்குத் தரப்படுகின்ற அந்த விளக்கத்தின்படியான கிறிஸ்தவர்கள் எல்லா சபைகளிலும் இருக்கின்றனர், எல்லா சபைகளில் மட்டுமல்ல, கிறிஸ்துவை விசுவாசிக்காத கிறிஸ்தவர்களும் இருக்கின்றனர்! இந்த விளக்கம் ஏற்றுக் கொள்ளப்படுமென்றால், இரக்கமுள்ள, பரந்த இருதயமுள்ள முகமதியர்கள் மற்றும் பௌத்தர்கள் யாவரும் கிறிஸ்தவர்களே!*

*மற்ற சிலர், "கிறிஸ்தவர் ஒரு நல்ல நபர் மாத்திரமல்ல, அவர் கிறிஸ்துவில் விசுவாசமுள்ளவராகவும் இருக்கிறார்" என்று கூறலாம். கிறிஸ்தவரைப்பற்றிய இந்த இரண்டாவது விளக்கம் சரியானதென்றால், எல்லா சபைகளிலும் கிறிஸ்தவர்கள் உள்ள னரா? இதற்கு உடனே நாம், "இல்லை, ஐக்கிய மற்றும் யூத சபைகளில் கிறிஸ்துவில் விசுவாசம்பற்றி போதிப்பதில்லை" என்று பதில் கூறியாக வேண்டும். ஆகவே, ஒரு மனிதர் கிறிஸ்தவராயிருப்பதற்குக் கிறிஸ்துவில் விசுவாசம் தேவை யென்றால், ஐக்கிய சபை அல்லது யூத சபைகளில் கிறிஸ்தவர் கள் இல்லை என்று ஆகின்றது.*

*உங்கள் வேதாகமத்திற்கு நீங்கள் திரும்பினால், கிறிஸ்தவ ராயிருப்பதற்கு, விசுவாசத்தோடு கூட வேறு சில செயல்களும் செய்ய வேண்டியிருப்பதைக் காண்பீர்கள். கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பவர்கள், "தேவனுடைய பிள்ளைகளாகும் உரிமையை" பெறுகின்றனர் - ஆனால் விசுவாசத்தோடு இருப்பதால் மட்டும் அவர்கள் கிறிஸ்தவர்களாகிவிடுவதில்லை (யோவா. 1:12; 12:42). இயேசுவில் விசுவாசம் வைத்த பலரும் கூட இரட்சிக்கப்படாத நிலையில் இருந்ததாக வேதாகமம் நமக்குக் கூறுகின்றது (அப். 2:36-47). அவர்கள் மனந்திரும்பி,*

*ஞானஸ்நானம் பெறாத வரையில் கிறிஸ்தவர்களாகவில்லை. விசுவாசித்து, மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்களைத் தேவன் இரட்சித்தார்; அவர்கள் சீஷர்களாயினர், "கிறிஸ்தவர்கள்" என்று அழைக்கப்பட்டனர் (அப். 11:26; 26:28; 1 பேது. 4:16; யாக். 2:7ஐக் காண்க). தேவனுடைய வசனம், விசுவாசித்து, மனந்திரும்பி, முழுகுதலைப் பெற்ற நபரே கிறிஸ்தவர் என்று மெய்ப்பிக்கையில், எல்லா சபைகளிலும் கிறிஸ்தவர்கள் உள்ளனரா?*

*ஆயிரக்கணக்கான மக்கள் சில சபைகளில் விசுவாசிகளாக இல்லாமல், குழந்தைகளாகப் பிரவேசிக்கின்றனர்; அவர்கள் தங்கள் பெற்றோருடைய விசுவாசத்தினால் பிரவேசித்துள்ளனர். வேதாகமத்தில் உள்ளபடி, அவர்கள் கிறிஸ்தவர்களாயிருக்கின்றார்களா? அவர்கள் மனந்திரும்பாமல், தங்கள் வலது கைக்கும், இடது கைக்கும் வித்தியாசம் தெரியாமல் பிரவேசித்தனர். வேதாகமத்தில் விளக்கப்பட்டுள்ளபடி அவர்கள் கிறிஸ்தவர்களாயிருக்கின்றார்களா? ஆயிரக்கணக்கானவர்கள் முழுகுதலுக்குப் பதிலாகத் தெளித்தலின் மூலம் பிரவேசித்துள்ளனர் (ரோமர் 6:4; கொலோ. 2:12). தேவன் தமது வசனத்தில் உரைத்துள்ளபடியான கிறிஸ்தவர்களாய் அவர்கள் உள்ளனரா? ஆயிரக்கணக்கானவர்கள், முழுகுதலைப் பெற்றாலும், கிறிஸ்தவர்களாவதற்கு முழுகுதல் பெற வேண்டும் என்று போதிக்கப்படுவதில்லை ("உங்கள் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்," அப். 2:38; "உன் பாவங்கள் போகக் கழுவப்படு," அப். 22:16). கிறிஸ்தவர்களாயிருப்பதினால் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று அவர்களுக்குப் போதிக்கப்படுகின்றது. ஞானஸ்நானம் இன்றியே அவர்களது பாவங்கள் ஏற்கனவே கழுவப்பட்டு விட்டதென்று அவர்களுக்குக் கூறப்படுகிறது. கிறிஸ்தவர்கள் பற்றி தேவனுடைய புத்தகம் பேசுகின்றதுபோல அவர்கள் கிறிஸ்தவர்களாய் உள்ளனரா? அவர்கள் நல்ல, ஒழுக்கமுள்ள மக்கள், அவர்கள் இயேசுவில் விசுவாசம் வைத்து, அவருக்காக அயராத ஊழியம் செய்கின்றனர். இருப்பினும், வேதாகமத்தின்படி அவர்கள் கிறிஸ்தவர்களா? வேதாகமத்தின்படி அல்லவென்றால், வேறு எதன்படி அவர்கள் கிறிஸ்தவர்கள்? கிறிஸ்தவர்களாவதற்குக் கர்த்தர் அளித்த விளக்கத்தை மாற்ற மக்களுக்கு என்ன உரிமையுள்ளது?*

வேதாகமத்தின்படியாகக் கீழ்ப்படிந்து கிறிஸ்தவரானவர்

கள் (அப். 2:38), பிறகு நாமகரணக் கூட்டங்களில் சேர்ந்து விடுகின்றனர். அவர்கள் இன்னும் கிறிஸ்தவர்களாயிருக்கின் றனரா? ஆம், ஆனால் அவர்கள் தவறு செய்யப் புகுந்து விட்டனர். கிறிஸ்தவர்களாகிய நாம் பிரிந்துபோயிருப்பது தவறு என்று தேவன் நமக்குக் கூறுகிறார் (1 கொரி. 1:10-13). அவர்கள் இன்னும் தேவனுடைய மக்கள்தான், ஆனால் பரிதாபமான தவறில் உள்ளனர்.

மேலும், வேதாகமத்தில் உள்ள விளக்கத்தின்படி, ஆனால் வசனத்தின் ஆளுகையற்ற விதத்தில், தனிப்பட்ட வகையில், சீருடையணிந்த பாடகர் குழு, ஆராதனையில் இசைக் கருவிகள் இவற்றுடன் சில கிறிஸ்தவர்கள் உள்ளனர். அவர்கள் கிறிஸ்தவர்களா? ஆம், ஆனால் அவர்கள் சபையில் பாடும் முறைமையை மாற்றியுள்ளனர் (எபே. 5:19; எபி. 13:15), அதை ஒரு இசை நிகழ்ச்சியாக்கிவிட்டனர்.

இன்னும் சில கிறிஸ்தவர்கள், வேதாகமத்தில் விளக்கப் படுகின்றபடி, அவருடைய ஆசீர்வாதமான ஊழியத்தில் வெதுவெதுப்பான மற்றும் வித்தியாசப்பட்ட நிலையில் இருக்கின்றனர். இவர்கள் கிறிஸ்தவர்களா? ஆம், ஆனால் தேவன், "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது, அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயி னின்று வாந்தி பண்ணிப் போடுவேன்" (வெளி. 3:15, 16) என்று கூறுகிறார். வெதுவெதுப்பாயிருக்கிற கிறிஸ்தவர்கள் கர்த்தரை நோயுள்ளவராகப் பண்ணுகின்றனர்.

பின்வரும் மூன்று சூழ்நிலைகள் வேத வசனத்தின்படி தவறானவையாகவும், கவனம் செலுத்தப்பட வேண்டியவை களாகவும் உள்ளன: (1) வேத வசன விளக்கத்தின்படி கிறிஸ்தவர்களாயிராத சபை உறுப்பினர்கள் தங்களை வேத வசனம் விளக்குகின்றபடியான கிறிஸ்தவர்களாய் ஆக்கிக் கொள்ள வேண்டும். (2) வேத வசன விளக்கத்தின்படியான கிறிஸ்தவர்களாயுள்ளவர்கள் மனித பாரம்பரியங்களை உதறிவிட்டு, வேதாகம ரீதியான எளிய ஆராதனைக்குத் திரும்ப வேண்டும். (3) வேதாகம விளக்கத்தின்படியான கிறிஸ்தவர் களாய் இருந்தும், வெதுவெதுப்பான நிலைக்குச் சென்றுள்ள கிறிஸ்தவர்கள், தாங்கள் "ஆதியிலே கொண்டிருந்த அன்பை" நோக்கித் திரும்பவேண்டும் (வெளி. 2:4).